RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 134 | மே.20, 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## மின்கம்பிகள் அறுந்து விழுந்தால் மின்சாரத்தை உடனடியாக துண்டிக்கும் கருவி: மின்மாற்றிகளில் பொருத்த திட்டம்

சென்னை: மே.20-

மின்கம்பம் மேல் மின்கம்பிகள் அறுந்து விழுந்தால், உடனே மின்மாற்றிகளில் இருந்து மின்சாரம் வருவதை தானாகவே துண்டிக்கும் ‘எர்த் லீக்கேஜ் சர்க்யூட் பிரேக்கர்’ திட்டத்தை மின்வாரியம் செயல்படுத்த உள்ளது.



சென்னையில் வீடுகள், வணிக நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்டவற்றுக்கு தரைக்கு அடியில் கேபிள் மூலமாகவும், மற்ற இடங்களில் மின்கம்பங்கள் மேலம் செல்லும் மின்கம்பிகள் மூலமாகவும் மின்விநியோகம் செய்யப்படுகிறது.

மழை, பலத்தக் காற்று உள்ளிட்ட இயற்கை சீற்றங்களின் போது மின்கம்பிகள் அறுந்து விழுகின்றன. அப்போது, மின்விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், மின்கம்பிகள் அறுந்து விழுந்ததும் அதற்கு மின்சாரம் வரும் மின்மாற்றிகளில் (டிரான்ஸ்ஃபார்மர்) இருந்து தானாகவே மின்விநியோகம் துண்டிக்கப்படும் திட்டத்தை செயல்படுத்த கடந்த 2022ம் ஆண்டு மின்வாரியம் முடிவு செய்தது.

இதுதொடர்பாக, பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதன் அடிப்படையில், யானை வழித் தடங்களில் மின்கம்பி அறுந்து விழுவதால் ஏற்படும் மின்விபத்தைத் தடுக்க அங்குள்ள மின்மாற்றிகளில், மின்சாரம் செல்வதை உடனடியாக தானியங்கி முறையில் துண்டிக்கும் ‘மோல்டட் கேஸ் சர்க்கியூட் பிரேக்கர்’ திட்டம், 223 மின்மாற்றிகளில் பொருத்தப்பட்டுள்ளது.

அதே போன்ற தொழில்நுட்பத்தில் 2,136 மின்மாற்றிகளில் மின்சாரத்தை தானியங்கி முறையில் துண்டிக்கும் சாதனங்கள் பொருத்தப்பட உள்ளன.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில், ‘‘தானியங்கி முறையில் மின்சாரத்தை துண்டிக்கும் 4 ஆயிரம் ‘எர்த் லீக்கேஜ் சர்க்யூட் பிரேக்கர்’ கருவிகளை பொருத்த ஒப்பந்தப் பணிக்கு டெண்டர் கோரப்பட்டு, தனியார் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. இதில், தகுதியான நிறுவனங்கள் தேர்வு செய்யப்படும்.

தற்போது, தானியங்கி முறையில் மின்சாரத்தை துண்டிக்கும் 4 ஆயிரம் கருவிகள், அடிக்கடி மின்கம்பிகள் அறுந்து விழும் இடங்களில் உள்ள மின்மாற்றிகளில் பொருத்தப்பட உள்ளன.

அவற்றின் செயல்பாடு பொருத்து, மாநிலம் முழுவதும் இத்திட்டம் விரவுபடுத்தப்படும்’’ என்றனர்.

## நீர் வரத்து 904 கன அடியாக அதிகரிப்பு: வேகமாக நிரம்பும் ஓசூர் கெலவரப்பள்ளி அணை

ஓசூர்: மே.20-

தென்பெண்ணை ஆற்று நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து 904 கன அடியாக அதிகரித்துள்ளது. அணை வேகமாக நிரம்புவதால் ஆற்றில் நீர் திறக்கப்பட்டுள்ளது

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் கெலவரப்பள்ளி அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளான தமிழக மற்றும் கர்நாடக தென்பெண்ணை ஆற்று பகுதிகளில் கடந்த சில தினங்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது.

நீர்பிடிப்புப் பகுதிகளில் நேற்று முன்தினம் மழை பெய்ததால், அணைக்கு நீர் வரத்து மேலும் உயர்ந்த நிலையில், நேற்று இரவு ஓசூர் மற்றும் அதன் சுற்றி உள்ள பகுதிகளில் கனமழை பெய்தது, இதனால் ஓசூரில் 48 மிமீ, கெலவரப்பள்ளியில் 90 மிமீ, தேன்கனிக்கோட்டை 22 மிமீ,அஞ்செட்டியில் 4.80 மிமீ என மழை பெய்துள்ளது.


தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக நேற்று அணைக்கு நீர் வரத்து 572 கன அடியாக வந்த நிலையில், இன்று காலை கெலவரப்பள்ளி அணைக்கு 904 கன அடியாக நீர் வரத்து உயர்ந்தது. அணையின் மொத்த உயரம் 44.28 அடியாக இருக்கும் நிலையில் , தற்போது 41.98 அடியாக நீர் மட்டம் உள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின்பாதுகாப்பு கருதி, அந்த அணையில் இருந்து பாசன கால்வாய் மற்றும் தென்பெண்ணை ஆற்றில் 794.43 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால் ஆற்றில் நுரை பொங்கி தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது.

## துணைநிலை ஆளுநருடன் எந்த மோதலும் இல்லை: புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி

புதுச்சேரி: மே.20-

துணைநிலை ஆளுநருடன் எந்த மோதலும் இல்லை என்று புதுச்சேரி மாநில முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.



புதுச்சேரியில் துணைநிலை ஆளுநருக்கும், முதல்வருக்கும் பனிப்போர் நிலவி வருவதாக காங்கிரஸ், அதிமுக கட்சிகள் குற்றம்சாட்டி வந்தன.

இந்நிலையில், புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் இன்று கூறியதாவது: புதுச்சேரியில் துணைநிலை ஆளுநருடன் எந்த பிரச்சினையும் இல்லை. மாநில அந்தஸ்து கேட்டு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். புதுவைக்கு மாநில அந்தஸ்து அவசியமானது. அரசின் வேகமான செயல்பாட்டுக்கு மாநில அந்தஸ்து கேட்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அதிகாரம் வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். இது எனக்காக கேட்பதில்லை. வரும் கால தேவை என்பதால் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசிடம் திட்டங்களை கேட்டு பெறுகிறோம். அமைச்சர்கள் இதற்காக டெல்லி சென்று வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகள் இந்த ஆட்சியில் ஒன்றுமே செய்யவில்லை என கூறுகிறார்களே என கேட்டபோது, “கடந்த 5 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சி எப்படி நடந்தது என எல்லோருக்கும் தெரியும். யாருடைய ஆட்சியில் எந்த திட்டங்கள் கொண்டுவரப்பட்டது என்பதையும் மக்கள் அறிவார்கள்” என்று முதல்வர் கூறினார்.

## பருவமழை முன்னேற்பாடுகள்: அமைச்சர்கள், அதிகாரிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை!

சென்னை: மே.20-

தென்மேற்கு பருவமழைக்கான முன்னேற்பாடுகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் காலை முக்கிய ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பெரும்பாலான மாவட்டங்களில் கோடை மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், விரைவில் தொடங்கவுள்ள தென்மேற்கு பருவமழைக்கான முன்னேற்பாடுகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.




இந்தக் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், “தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும். மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் கூடுதல் கவனம் தேவை. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நிலச்சரிவை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மழைக்காலங்களில் கடலோர மாவட்டங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இயல்பாகவே இருக்கும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. பருவமழை காலத்தில் பேரிடர் முகாம்கள் தயார் நிலையில் இருப்பதுடன், உணவுப்பொருட்கள் போதுமான அளவு கையிருப்பு உள்ளதை உறுதி செய்ய வேண்டும். அதேபோல மாநில கட்டுப்பாட்டு மையம் 24 மணி நேரமும் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். 4 ஆண்டுகளில் பல பேரிடர்களைத் திறம்பட எதிர்கொண்டோம். அதேபோல இப்போதும் செயல்பட வேண்டும்.” என்று கூறினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி, வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன், வருவாய்த் துறை அமைச்சர் பெரியசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் துறை அதிகாரிகளும், வானிலை ஆய்வு மைய அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

## தமிழக அரசுக்கு ரூ.25 லட்சம் அபராதம்: நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஐகோர்ட் அதிரடி

மதுரை: மே.20-

மணல் குவாரி உரிமம் தொடர்பாக உயர் நீதிமன்றம் 15 ஆண்டுகளுக்கு முன்பு பிறப்பித்த உத்தரவை செயல்படுத்தாததால் தமிழக தொழில்துறை முதன்மை செயலாளர் குவாரி உரிமையாளர்களுக்கு ரூ.20 லட்சம், தலைமை நீதிபதி நிவாரண நிதிக்கு ரூ.5 லட்சம் வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு எதிராக சாந்தி, பாலாஜி, விஷ்ணுவர்தன், உமா மகேஸ்வரி, பவானி ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு மனு: திருச்சி தொட்டியம் தாலுகா ஸ்ரீனிவாசநல்லூரில் காவிரி ஆற்றில் 2001 முதல் 2004 வரை மணல் குவாரி நடத்த உரிமம் பெற்றிருந்தோம். அடுத்த சில மாதங்களில் மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்தியது. மணல் குவாரிகளை அரசு ஏற்றதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தோம்.




அந்த வழக்கில் அரசின் உத்தரவை நீதிமன்றம் உறுதி செய்த போதிலும், நாங்கள் சில மாதங்கள் குவாரி நடத்த அனுமதி வழங்கியது. இதற்கு எதிராக திருச்சி மாவட்ட ஆட்சியர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்ற உத்தரவை உறுதி செய்தது.

அதன் பின்னரும் உயர் நீதிமன்ற உத்தரவை மாவட்ட நிர்வாகம் அமல்படுத்தவில்லை. எனவே உயர் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாத திருச்சி மாவட்ட ஆட்சியர் மீது அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்து நீதிபதி குமரேஷ்பாபு பிறப்பித்த உத்தரவு: மணல் குவாரி நடத்தும் பொறுப்பை அரசு ஏற்றபின்பு மனுதாரர்களுக்கு ஆறு மாதம் குவாரி நடத்த உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இருப்பினும் மாவட்ட நிர்வாகம் பல்வேறு காரணங்களை கூறி குவாரி நடத்த மனுதாரர்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

மனுதாரர்கள் பல மனுக்கள் அனுப்பியும், நீதிமன்றத்தில் உத்தரவுகள் பெற்றும் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவில்லை. உயர் நீதிமன்ற உத்தரவு 15 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் உள்ளது. இந்தக் காலகட்டத்தில் பல மாவட்ட ஆட்சியர்கள் பொறுப்பில் இருந்து மாறியிருப்பார்கள். இதனால் தற்போதைய ஆட்சியரை மட்டும் குறை சொல்வதால் எந்த பயனும் இல்லை.

எனவே, நீதிமன்ற உத்தரவை வேண்டும் என்றே மீறியதற்காக மனுதாரர்கள் 5 பேருக்கும் தமிழக தொழில்துறை முதன்மை செயலர் ரூ.20 லட்சம் வழங்க வேண்டும். இது தவிர உயர்நீதிமன்றம் தலைமை நீதிபதியின் நிவாரண நிதிக்கு ரூ.5 லட்சம் வழங்க வேண்டும். இந்த தொகையை 8 வாரங்களில் செலுத்த வேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

## 3 லட்சம் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும்: தமிழ்நாடு அனைத்து போட்டி தேர்வு அமைப்பு வலியுறுத்தல்

சென்னை: மே.20-

திமுகவின் தேர்தல் வாக்குறுதிப்படி, 3 லட்சம் காலி பணியிடங்களை விரைவாக நிரப்பவேண்டும் என்று தமிழ்நாடு அனைத்துப்போட்டி தேர்வு அமைப்பு வலியுறுத்தியுள்ளது.




டிஎன்பிஎஸ்சியால் நடத்தப்படும் குரூப்1 தேர்வு வயது உச்சவரம்பை மற்ற 12 மாநிலங்களில் உள்ளதுபோல 49 வயது வரை உயர்த்த வேண்டும்; வெளிப்படைத்தன்மையுடன் டிஎன்பிஎஸ்சி செயல்பட வேண்டும்; தமிழ் வழியில் முதன்மைத் தேர்வு எழுதுபவர்களுக்கு மட்டுமே இடஒதுக்கீடு 20 சதவீதம் வழங்க வேண்டும்; தேர்வு முடிவுகளை விரைந்து வெளியிட வேண்டும்;

முதன்மை (மெயின்ஸ்) தேர்வு மதிப்பீட்டினை நியாயமான முறையில் வழங்க வேண்டும்; ஆங்கில விடையே இறுதியானது என்பதை மாற்றி தமிழ் விடைகளே இறுதியானது என மாற்றி அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அனைத்துப்போட்டி தேர்வு அமைப்பு சார்பில், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம்

அருகே நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது. இதில், இந்த அமைப்பின் தலைவர் கலீல்பாஷா, செயலாளர் திருக்குமரன் உள்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின்போது, தமிழ்நாடு அனைத்துப் போட்டி தேர்வு மாணவர் அமைப்பு தலைவர் கலீல்பாஷா கூறியதாவது: டிஎன்பிஎஸ்சி குரூப்2 ஏ தேர்வு முடிவு கடந்த சனிக்கிழமை வெளியானது. இந்ததேர்வில் தமிழ், ஆங்கிலம் என 2 வழிகளில் மாணவர்கள் எழுதி உள்ளனர். ஆங்கிலம் வழி எழுதியவருக்கு 90 சதவீதம் தேர்ச்சி வழங்கி உள்ளனர். தமிழ் வழியில் 10 சதவீதமே தேர்ச்சி வழங்கி உள்ளனர்.

இத்தேர்வில் தமிழ் வழி தேர்வு எழுதுபவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி தலைவரை சந்தித்து பேசினோம். சரியான பதில் தரவில்லை.

சட்டப்பேரவை தேர்தல்போது, 5 ஆண்டுகளில் 3 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார். ஆனால், 4 ஆண்டு ஆட்சியில் 30 ஆயிரம் காலிப் பணியிடங்களை கூட நிரப்பவில்லை. அதாவது 10 சதவீதம் கூட நிரப்பவில்லை. எனவே, தேர்தல் வாக்குறுதிப்படி காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

சமூக நீதி தொடர்பாக தமிழக முதல்வர் வலியுறுத்தி பேசிவருகிறார். மற்ற மாநிலங்களில் அதாவது சமூகநீதி பின்பற்றாத 12 மாநிலங்களில் குரூப்1 தேர்வு வயது உச்சவரம்பு 49 முதல் 51 வரை உள்ளது. எனவே, குரூப்1 தேர்வுக்கான வயது உச்ச வரம்பை அதிகரிக்க வேண்டும். இதன்மூலம், பெண்கள் அதிக அளவில் பயன்பெறுவார்கள். தேர்வு முடிவுகளை ஆண்டுதோறும் வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



# தாம்பரம் மேற்கு பகுதி கழக அதிமுக சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

தாம்பரம், மே.20-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி கழக அதிமுக சார்பில் கழக பொதுச்செயலாளர் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு செங்கல்பட்டு மேற்கு மாவட்ட மகளிர் அணி இணை செயலாளர் ஆர்.அமுதா ஏற்பாட்டின் பேரில் பெருங்களத்தூரில் உள்ள பஷிய தீபம் மனவளர்ச்சி குன்றிய காப்பகத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி காப்பகம் வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் அமைச்சர்/ கழக வர்த்தக அணி செயலாளர் சி.த.செல்லபாண்டியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்/ செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் நாவலூர் முத்து, ஆகியோர் கலந்து கொண்டு பஷிய தீபம் மனவளர்ச்சி குன்றிய காப்பகத்தில் இருக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாநகர மேற்கு பகுதி கழக செயலாளர் கோபிநாத், மாநகர கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.கூத்தன், மாநகர மத்திய பகுதி கழக செயலாளர் எல்லார்செழியன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக பொருளாளர் பி.கே. பரசுராமன், மாமன்ற உறுப்பினர் பகுதி கழக துணைச் செயலாளர் ஸ்டார் பிரபா, தலைமை கழக பேச்சாளர் எஸ்.மூர்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி நகர துணை தலைவர் பாபி என்கின்ற மிர்துன்ஜேயன், மகளிர் அணி நிர்வாகி லோகநாயகி, சுசீலா மற்றும் மாவட்ட வட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள், மகளிர் அணியை சேர்ந்த நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் கலைஞரின் கனவு இல்லம் கட்டுவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்



திருப்பூர், மே.20-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் கலைஞரின் கனவு இல்லம் கட்டும் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் கடந்த (17.05.2025) திருப்பூர் மாவட்டம், பல்லடம் மற்றும் பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் கலைஞரின் கனவு இல்லம் கட்டும் பணிகள் மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் திருப்பூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை செயல் படுத்தி வருகிறார்கள். இந்த திட்டப்ப ணிகள் பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் நேற்றைய தினம், பல்லடம் மற்றும் பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கலைஞரின் கனவு இல்லம் கட்டும் பணிகள் மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.


2024-2025 ஆம் நிதியாண்டில் 1411 பயனாளிகளிக்கு ரூ.49.38 கோடி மதிப்பீட்டிலும், ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தின் கீழ் 2093 பயனாளிகளுக்கு ரூ.15.30 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 3,504 பயனாளிகளுக்கு ரூ.64.69 கோடி மதிப்பீட்டில் ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 2025 2026 ஆம் நிதியாண்டில் 1772 பயனாளிகளுக்கு ரூ.54.93 கோடி மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் மற்றும் ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டப்பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம். பல்லடம் மற்றும் பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம் வடுகபாளையம் புதூரில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கிழ் கட்டப்பட்டு வரும் வீடுகள். வடுகபாளையம் ஊராட்சி. வெங்கடாபுரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி. அனுப்பட்டி ஊராட்சி, அனுப்பட்டியில் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊர்ப்புற நூலகம். பணிக்கம்பட்டி ஊராட்சி வேலப்ப கவுண்டம்பாளையத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கிழ் கட்டப்பட்டு வரும் வீடுகள். மாணிக்கபுரம் ஊராட்சி. அண்ணாமலை கார்டனில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அடர்வனத்தையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து. பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம். பொங்கலூர் ஊராட்சி. தேவனம்பாளையத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் மற்றும் காட்டுப்பாளையத்தில் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு திட்டப்பணிகளை விரைந்த முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரி வித்தார்கள்.

இந்த ஆய்வின் போது, பல்லடம் வட்டாட்சியர் சபரி. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கனகராஜ், (பல்லடம்) விஜயகுமார் சுரேஷ் (பொங்கலூர்), வட்டார உதவி பொறியாளார் செந்தில் வடிவு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# ஜோ பைடனுக்கு தீவிரமான புற்றுநோய் விரைவில் குணமடைய ட்ரம்ப் விழைவு



வாஷிங்டன், மே.20-

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோ பைடனுக்கு புரோஸ்டேட் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அவரது அலுவலகம் ஞாயிற்றுக்கிழமை (மே 18, 2025) தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (மே 16, 2025) அவருக்கு புரோஸ்டேட் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டதாகவும், புற்றுநோய் செல்கள் எலும்புக்கு பரவியுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் ஜோ பைடனின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புரோஸ்டேட் புற்றுநோய்களுக்கு க்ளீசன் மதிப்பெண் எனப்படும் ஒரு மதிப்பெண் வழங்கப்படுகிறது. இது சாதாரண செல்களுடன் ஒப்பிடும்போது புற்றுநோய் செல்கள் எவ்வாறு தோற்றமளிக்கின்றன என்பதை 1 முதல் 10 வரை அளவிடும். இதில், ஜோ பைடனின் மதிப்பெண் 9 என்றும், இது அவரது புற்றுநோய் தீவிரமாக இருப்பதைக் குறிக்கிறது என்றும் அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

புரோஸ்டேட் புற்றுநோய் பெரும்பாலும் எலும்புகளுக்கு பரவுகிறது என்றும், இதற்கு சிகிச்சையளிப்பது மிகவும் கடினம் என்றும் கூறப்படுகிறது. "இது நோயின் தீவிரமான வடிவத்தைக் குறிக்கும் அதே வேளையில், புற்றுநோய் ஹார்மோன் உணர்திறன் கொண்டதாகத் தோன்றுகிறது. இது பயனுள்ள சிகிச்சை முறைக்கு அனுமதிக்கிறது. ஜோ பைடனும் அவரது குடும்பத்தினரும் அவரது மருத்துவர்களுடன் சிகிச்சை விருப்பங்களை மதிப்பாய்வு செய்து வருகின்றனர்." என்று பைடனின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜோ பைடன் விரைவில் குணமடைய பல அரசியல் தலைவர்கள் தங்கள் ஆறுதல்களைத் தெரிவித்துள்ளனர். அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள செய்தியில், "ஜோ பைடனின் மருத்துவ அறிக்கை தொடர்பாக சமீபத்தில் தகவல் அறிந்து நானும் மெலனியாவும் மிகவும் வருத்தமடைந்துள்ளோம். ஜில் பைடன் மற்றும் குடும்பத்தினருக்கு நாங்கள் எங்கள் ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஜோ விரைவில் குணமடைய விரும்புகிறோம்." என தெரிவித்துள்ளார்.

முன்னாள் துணை அதிபர் கமலா ஹாரிஸ் வெளியிட்டுள்ள செய்தியில், "பைடனுக்கு புரோஸ்டேட் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டதை அறிந்து நானும் எனது கணவரும் மிகவும் வருத்தமடைந்தோம். இந்த நேரத்தில் அவருக்காகவும், அவரது முழு குடும்பத்திற்காகவும் நாங்கள் பிரார்த்திக்கிறோம். ஜோ ஒரு போராளி. அவர் இந்த சவாலை நம்பிக்கையுடன் எதிர்கொள்வார் என்பது எனக்குத் தெரியும். அவர் முழுமையாகவும் விரைவாகவும் குணமடைவார் என்று நங்கள் நம்புகிறோம்." என்று தெரிவித்துள்ளார்.



# கோயம்பேடு சந்தையில் முருங்கைக்காய் விலை ரூ.30 ஆக குறைந்தது

சென்னை, மே.20-

கோயம்பேடு சந்தையில் மொத்த விலையில் முருங்கைக்காய் விலை கிலோ ரூ.30 ஆக குறைந்துள்ளது. தேசிய அளவில் முருங்கைக்காய் உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் முருங்கைக்காய் அதிக அளவில் விளைகிறது.

கோயம்பேடு சந்தையில் கடந்த வாரம் மொத்த விலையில் முருங்கைக்காய் கிலோ ரூ.60க்கு விற்கப்பட்டு வந்தது. இந்நிலையில், நேற்று அதன் விலை கிலோ ரூ.30 ஆக குறைந்துள்ளது.

மற்ற காய்கறிகளான பீன்ஸ் ரூ.60, சாம்பார் வெங்காயம் ரூ.35, பச்சை மிளகாய் ரூ.25, வெண்டைக்காய், பாகற்காய் ரூ.20, கேரட் ரூ.18, பீட்ரூட், நூக்கல், உருளைக்கிழங்கு தலா ரூ.15, தக்காளி ரூ.13, பெரிய வெங்காயம் ரூ.12, முள்ளங்கி, கத்தரிக்காய், புடலங்காய் தலா ரூ.10, முட்டைக்கோஸ் ரூ.5 என விற்கப்பட்டு வருகிறது.

முருங்கைக்காய் விலை குறைந்திருப்பது குறித்து, கோயம்பேடு சந்தை வியாபாரிகளிடம் கேட்டபோது, ''கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் வெப்பம் அதிகமாக இருந்ததால், முருங்கைக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்து இருந்தது. அதன்பிறகு, தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து வரும் நிலையில், முருங்கைக்காய் வரத்து அதிகரித்து அதன் விலை குறைந்துள்ளது. தென்மேற்கு பருவமழை தொடங்கிய பிறகு, ஜூலை மாதத்தில் மீண்டும் முருங்கைக்காய் விலை உயர வாய்ப்புள்ளது'' என்றனர்.



# தாம்பரம் மேற்கு பகுதி கழக அதிமுக சார்பில் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தாம்பரம், மே.20-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி கழக அதிமுக சார்பில் கழக பொதுச்செயலாளர் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 1000 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி தாம்பரம் மாநகர மேற்கு பகுதி கழக செயலாளர் கோபிநாத் தலைமையில், தாம்பரம் மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதி வெங்கடேசன் ஏற்பாட்டின் பேரில் கன்னடபாளையம் மேல்நிலைப்பள்ளி பஜனை கோவில் தெருவில் நடைபெற்றது. நிகழ்ச்சி சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் அமைச்சர்/ கழக வர்த்தக அணி செயலாளர் சி.த.செல்லபாண்டியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்/ செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் நாவலூர் முத்து, ஆகியோர் கலந்து கொண்டு 1000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாநகர கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.கூத்தன், மாநகர மத்திய பகுதி கழக செயலாளர் எல்லார் செழியன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக பொருளாளர் பி.கே. பரசுராமன், மாமன்ற உறுப்பினர் பகுதி கழக துணைச் செயலாளர் ஸ்டார்ப் பிரபா, தலைமை கழக பேச்சாளர் எஸ்.மூர்த்தி, மேற்கு பகுதி பொருளாளர் மோகன், மாவட்ட பிரதிநிதி கார்த்தி, மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் ஆர்.அமுதா, வட்டக் கழக செயலாளர்கள் மோகன், செந்தில், 32வது வார்டு பொறுப்பாளர் ஜே.மாரி, ஆர்.முத்துக்குமார், தகவல் தொழில்நுட்ப அணி நகர துணை தலைவர் பாபி என்கின்ற மிர்துன்ஜெயன், மகளிர் அணி நிர்வாகி லோகநாயகி சுசீலா மற்றும் மாவட்ட வட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள், மகளிர் அணியை சேர்ந்த நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




# கோடை விடுமுறை எதிரொலியால் கொல்லிமலையில் குவிந்த சுற்றுலா பயணிகள்

நாமக்கல், மே.20-

கோடை விடுமுறையைத் தொடர்ந்து கொல்லிமலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை நேற்று அதிகரித்து இருந்தது. நாமக்கல்சேலம் மாவட்ட எல்லையில் கொல்லிமலை அமைந்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் கொல்லிமலைக்கு வந்து, ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி, மாசிலா அருவி மற்றும் நம் அருவிகளுக்குச் சென்று நீராடி மகிழ்கின்றனர்.

இந்நிலையில், கொல்லிமலை உட்பட நாமக்கல் மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், கொல்லிமலையில் உள்ள அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. தற்போது பள்ளிகளுக்குக் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், கடந்த இரு நாட்களாகக் கொல்லிமலைக்கு பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் வருகை கணிசமாக அதிகரித்தது. சுற்றுலாப் பயணிகள் மலையின் பல்வேறு இடங்களைக் கண்டு ரசித்ததுடன், அருவிகளில் குளித்து மகிழ்ந்தனர்.




# ஜூலை 7ல் கும்பாபிஷேகம்; திருச்செந்தூர் கோயிலில் யாகசாலை முகூர்த்த கால் நடும் விழா

திருச்செந்தூர், மே.20-

தமிழ்க்கடவுள் முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் கோயிலில் ஜூலை 7ம்தேதி மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேகத்துக்கான யாகசாலை பூஜைகள் வருகின்ற ஜூலை 1ம்தேதி தொடங்கி நடைபெற உள்ளது. முதற்கட்டமாக நேற்று காலை சண்முகருக்கு யாகசாலைகள் அமைப்பதற்காக பூமிபூஜை, முகூர்த்தக் கால் நடும் விழா நடந்தது. இதனை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூபம், 5 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகமும், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடந்தது.

ராஜகோபுரம் மேலவாசல் அருகே யாகசாலை அமைக்கப்பட உள்ள இடத்தில் பூஜை செய்யப்பட்ட முகூர்த்தக் கால் நடப்பட்டது. இதில், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கலெக்டர் இளம்பகவத், கோயில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் உள்ளிட்டோர் முகூர்த்தக் கால் நட்டனர்.



# ஊட்டி அருகே குடியிருப்புகளுக்குள் நுழைந்த இரு சிறுத்தைகள்

ஊட்டி, மே.20-

ஊட்டி அருகே உள்ள கொல்லிமலை பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் இரவு நேரத்தில் இரு சிறுத்தைகள் புகுந்த சம்பவத்தால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறியதாவது: நீலகிரி வனக்கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் குடியிருப்புகளில் சிறுத்தைகள் நடமாட்டம் இருப்பது தெரியவந்துள்ளது. குன்னூர், கோத்தகிரி, ஊட்டி ஆகிய பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் தொடர்பாக அதிக புகார்கள் வந்துள்ளன. தற்போது கொல்லி மலை பகுதியில் குடியிருப்புக்குள் இரு சிறுத்தைகள் நுழைந்த காட்சி, அங்கு பொருத் தியிருந்த கண்காணிப்புக் கேமராவில் பதிவாகியுள்ளது.

இறைச்சிக் கழிகள் மற்றும் வளர்ப்பு நாய்களால் கவரப்பட்டு, குடியிருப்புப் பகுதிகளுக்கு சிறுத்தைகள் வருகின்றன. நாய் வளர்ப்பவர்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் கூண்டுகளை அமைத்து நாய்களை பராமரிக்க வேண்டும். குடியிருப்புப் பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் இருந்தால் வனத்துறையை அணுகலாம். இரவு நேரங்களில் வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும். இறைச்சிக் கழிவுகளை தெருவோர சாலைகளில் கொட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



# கடலூரில் தொடர் கனமழை: குறுவை பயிரிட்ட 250 ஏக்கர் விளைநிலங்கள் சேதம்

கடலூர், மே.20-

கடலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் பலத்த மழை பெய்ததில் குறுவை பயிரிட்ட 250 ஏக்கர் அளவிலான விளைநிலங்கள் மழை தண்ணீரில் மூழ்கியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மழை பெய்து வருகிறது. நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புவனகிரி, சேத்தியாத் தோப்பு, ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி, லால்பேட்டை, வேப்பூர், பண்ருட்டி, அண்ணாமலைநகர், விருத்தாசலம் உள்ளிட்ட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.


இதனால் சாலைகளில் மழை தண்ணீர் ஆறு போல ஓடியது, தாழ்வான இடங்களில் மழை தண்ணீர் தேங்கி நின்றது. இந்த மழையால் ஸ்ரீமுஷ்ணம் பகுதிகளில் கூடலையாத்தூர், முடிகண்ட நல்லூர், கானூர், பேரூர், காவாலகுடி, மழவராயநல்லூர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் குறுவை பருவ நெல் நடவு செய்யப்பட்ட வயல்கள் சுமார் 250 ஏக்கர் மழை தண்ணீரில் மூழ்கியுள்ளது.

இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கூறுகையில் சரியான வடிகால் வசதி இல்லாததால் மழை தண்ணீர் வடியாமல் விளை நிலங்கள் மூழ்கியு ள்ளன. கடன் வாங்கி போர்வெல்லில் குறுவை விவசாயம் செய்துள்ளோம். தண்ணீர் தேங்கியுள்ளதால் பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இது எங்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றனர்.

மாவட்டத்தில் மழை யளவு: அண்ணாமலை நகரில் 117 மிமீ, லால்பேட்டையில் 107 மிமீ, வேப்பூரில் 107 மிமீ, ஸ்ரீமுஷ்ணத்தில் 89.1 மிமீ, சிதம்பரத்தில் 85.8 மிமீ, விருத்தாசலத்தில் 76 மிமீ, காட்டுமன்னார்கோவிலில் 75.4 மிமீ, புவனகிரியில் 59 மிமீ, பரங்கிப்பேட்டையில் 55.4 மிமீ, சேத்தியாத்தோப்பில் 54 மிமீ, கடலூரில் 40 மிமீ, பண்ருட்டியில் 36 மிமீ, குறிஞ்சிப்பாடியில் 27 மிமீ மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில் பலத்த மழை பெய்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக மாவட் டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. வெப்பக்காற்றும் வீசியது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்து வந்தனர். இந்த நிலையில் இந்த மழை மாவட்டம் முழுவதும் குளிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# பெங்களூருவில் ஒரே இரவில் கொட்டித் தீர்த்த 100 மி.மீ கனமழை: வெள்ளப்பெருக்கால் போக்குவரத்து பாதிப்பு



பெங்களூரு, மே.20-

நேற்று முன்தினம் (ஞாயிறு) இரவு முதல் நேற்று (திங்கள்) காலைக்குள் பெங்களூருவில் ஆறு மணி நேரத்துக்கும் மேலாக பெய்த கனமழையால், நகரின் பல பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வானிலை ஆய்வு மையத்தின் தரவுகளின்படி, கடந்த 24 மணி நேரத்தில் பெங்களூரு நகரில் 105.5 மிமீ மழை பெய்துள்ளது. ஹெச்ஏஎல் விமான நிலையத்தில் 78.3 மிமீ மழையும், கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் 105.5 மிமீ மழையும் பதிவாகியுள்ளது.

கர்நாடக மாநில இயற்கை பேரிடர் கண்காணிப்பு மையத்தின் (KSNDMC) தரவுகளின்படி, பெங்களூருவின் பல இடங்களில் மே 18 அன்று காலை 8:30 மணி முதல் மே 19 அன்று காலை 7 மணி வரை 100 மிமீக்கு மேல் மழை பதிவாகியுள்ளது. இவற்றில் கெங்கேரி (132 மிமீ), கேஎஸ்என்டிஎம்சி ஜிஇஓ வளாகம் (125.8 மிமீ), சோமஷெட்டிஹள்ளி (119.5 மிமீ), மதநாயக்கனஹள்ளி (116.5 மிமீ) மற்றும் யெலஹங்கா சவுடேஸ்வரி (103.5 மிமீ) ஆகியவை அடங்கும். பெங்களூருவுக்கு மே 23 வரை கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கையையும், தட்சிண கன்னடம், உடுப்பி, உத்தர கன்னடம், ஹாவேரி, பெலகாவி ஆகிய பகுதிகளுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையையும் வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது இந்த மழை காரணமாக ஹோரமாவுவில் உள்ள ஸ்ரீ சாய் லேஅவுட் மற்றும் ரெயின்போ டிரைவ் லேஅவுட் ஆகிய இடங்களில் தொடர்ந்து வெள்ளம் சூழ்ந்தது. சாய் லேஅவுட்டில் உள்ள வீடுகளில் இருந்து தண்ணீரை வெளியேற்ற மக்கள் போராடி வருகின் றனர், மேலும் ரெயின்போ டிரைவ் லேஅவுட்டில், சில சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பெங்களூரு மழை

இந்த கனமழை காரணமாக சாலைகள், பெருந்து நிலையங்கள், குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் வெள்ளத்தில் சிக்கிய மக்கள் படகுகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். கனமழையால் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் காரணமாக வாகன ஓட்டிகள் கடுமையான சிரமத்தை சந்தித்தனர். கோரமங்கலா, இந்திராநகர், சில்க் போர்டு சந்திப்புகள், எலக்ட்ரானிக் சிட்டி மேம்பாலம் மற்றும் பிற பகுதிகளில் அதிகாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. தண்ணீர் தேங்கியதால் இன்று காலை நேரத்தில் எலக்ட்ரானிக் சிட்டி மேம்பாலம் முடப்பட்டது. ஹெச்ஆர்பிஆர் லேஅவுட், மத்திய வணிக மாவட்டம் (சிபிடி), ஜேபி நகர், வைட்ஃபீல்ட், சர்ஜாபுரா ஆகிய இடங்களில் பல சாலைகள் போக்குவரத்து நெரிசலில் சிக்கின. ஹோரமாவுவில் உள்ள ஸ்ரீ சாய் லேஅவுட்டிற்கு மீட்புக் குழுக்கள் படகுகளுடன் வந்துள்ளன. அதேபோல பன்னேர் கட்டா சாலை மற்றும் பிற சாலைகளிலும் தண்ணீர் தேங்கி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சாந்திநகர் பேருந்து நிலையத்தின் ஒரு பகுதியும் இதனால் வெள்ளத்தில் மூழ்கியது. பல இடங்களில் பலத்த காற்றின் காரணமாக கிளைகள் மற்றும் மரங்கள் விழுந்ததால் சாலைகள் தடைபட்டு வாகனங்கள் சேதமடைந்தன. இப்பகுதியில் வீடுகள் மற்றும் பேருந்து நிலையம் வெள்ளத்தில் மூழ்கின. குறிப்பாக ஹோரமவுவில் உள்ள ஸ்ரீ சாய் லேஅவுட்டில், குடியிருப்பாளர்களை மீட்க மாநகராட்சி நிர்வாகம் ஒரு பேரிடர் மேலாண்மை குழுவை அனுப்பியது.

ரெயின்போ டிரைவ் லேஅவுட்டுக்குள் உள்ள சாலைகளிலும் தண்ணீர் புகுந்தது. கனமழை மற்றும் பலத்த காற்றில் கம்பங்கள் சாய்ந்து, டிரான்ஸ்மிஷன் கேபிள்கள் உடைந்ததால் நகரத்தின் பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது. யெலஹங்கா, ஹென்னூர், சிங்கசந்திரா, சிவாஜிநகர், கஸ்தூரி நகர், பனஸ்வாடி, பிடிஎம் லேஅவுட், முன்னேகொல்லால் மற்றும் மத்திகெரே போன்ற பல பகுதிகளில், ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள் அதிகாலை வரை மின்சாரம் தடைபட்டது. இதனால் தண்ணீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் போக்குவரத்தை சீர் செய்யவும், மின்சாரம் மற்றும் தண்ணீர் சேவையை மீட்டெடு க்கவும் பெங்களூரு மாநக ராட்சி நிர்வாகம் தீவிர நடவடிக் கைகளில் இறங்கியுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) வெள்ளிக்கிழமை வரை பெங்களூருக்கு 'மஞ்சள் எச்சரிக்கை' விடுத்துள்ளது. இது நகரம் முழுவதும் மிதமான மழை தொடர வாய்ப்புள்ளது என்பதைக் குறிக்கிறது.

# தமிழ்நாடு வரி வருவாய் 7.6% உயர்வு: தலைமை கணக்கு தணிக்கையாளர் தகவல்

சென்னை, மே.20-

தமிழ்நாடு வரி வருவாய் 7.6% உயர்ந்துள்ளதாக தலைமை கணக்கு தணிக்கையாளர் தெரிவித்துள்ளார். 2024-25 நிதியாண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் ரூ.1,80,225.53 கோடியாக இருந்தது. இது 2023-24 நிதியாண்டில் ரூ.1,67,105.18 கோடியிலிருந்து சுமார் 7.6% அதிகமாகும் என்று இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளரின் முதற்கட்ட தணிக்கை செய்யப்படாத தற்காலிக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.2025-26ம் ஆண்டுக்கான மாநில பட்ஜெட்டின்படி, பட்ஜெட் மதிப்பீடுகளில் செய்யப்பட்ட ரூ.1,95,173 கோடியுடன் ஒப்பிடும்போது, 2024-25ம் ஆண்டில், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் ரூ.1,92,752.43 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் SOTR 75.3% பங்களிக்கிறது. அதன் கூறுகளில், மாநில சரக்கு மற்றும் சேவை வரி 2023-24ல் ரூ.61,960.29 கோடியிலிருந்து 2024-25 இல் ரூ.70,886.65 கோடியாக 14.4% அதிகரித்துள்ளது என்று சிஏஜியின் எண்கள் தெரிவிக்கின்றன. முந்தியவைகள் மற்றும் பதிவு கட்டணங்கள் மூலம் மாநிலத்தின் வருவாய் 2023-24 இல் ரூ.19,013.36 கோடியிலிருந்து சுமார் 15% அதிகரித்து 2024 25 இல் ரூ.21,878.27 கோடியாக உயர்ந்துள்ளது. சிஏஜியின் முதற்கட்ட புள்ளிவிவரங்களின்படி, மற்ற கூறுகள் ஓரளவு வளர்ச்சியை மட்டுமே கண்டுள்ளன. ஆரம்ப புள்ளிவிவரங்களின்படி, நில வருவாய் 2023-24 இல் ரூ.255.87 கோடியிலிருந்து 2024-25 இல் ரூ.277.72 கோடியாக அதிகரித்துள்ளது.

விற்பனை, வர்த்தகம் போன்றவற்றின் மீதான வரிகளிலிருந்து (பெட்ரோல், டீசல் மற்றும் மதுபானங்கள் மீதான வாட் உட்பட) வருவாய் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.60,026.96 கோடியிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் ரூ.62,335.08 கோடியாக அதிகரித்துள்ளது. மாநில கலால் வரிகள் (மதுபான வருவாயைப் பிரதிபலிக்கின்றன) 2023 -24 ஆம் ஆண்டில் ரூ.10,774.29 கோடியிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் ரூ.11,055.41 கோடியாக அதிகரித்துள்ளது. பிற வரிகள் மற்றும் வரிகளிலிருந்து கிடைக்கும் வருவாய் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.15,074.41 கோடியிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் ரூ.13,792.40 கோடியாகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் மீதமுள்ள தொகை வரி அல்லாத வருவாய், மத்திய வரிகளில் பங்கு மற்றும் ஒன்றிய அரசின் மானியங்கள் மூலம் வருகிறது.

2024-25 ஆம் ஆண்டிற்கான மத்திய வரிகளில் பங்கு ரூ.52,491.88 கோடியாக இருந்தது. இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்டதற்கு ஏற்ப உள்ளது. 2024-25 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் மானிய உதவி ரூ.16,509.38 கோடியாக இருந்தது. இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் ரூ.20,538.40 கோடியாக இருந்தது.2024-25 ஆம் ஆண்டில் வரி அல்லாத வருவாய் ரூ.31,388.70 கோடியாக இருந்தது, இது திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் ரூ.28,124 கோடியாக இருந்தது. இந்தக் கூறுகளையும் சேர்த்து, 2024-25 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் ரூ.2,80,615.49 கோடியாக இருந்ததாக, சிஏஜியின் முதற்கட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 2024 25 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் வரவுகள் மதிப்பீடுகள் ரூ.2,93,906.41 கோடியாக திருத்தப்பட்டன.



## 2 வீடுகளுக்கு இடையே சிக்கிய மூதாட்டி: 3 மணி நேரம் போராடி தீயணைப்பு துறையினர் மீட்பு

சென்னை, மே.20-

இரண்டு வீடுகளுக்கு இடையே சிக்கிய மூதாட்டியை 3 மணி நேரம் போராடி தீயணைப்பு துறையினர் மீட்டனர். சென்னை மணலி காமராஜர் தெருவை சேர்ந்தவர் பொம்மி (60). இவர் தனது உறவினர்களுடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன் தினம் இவரது உறவினர்கள் அனைவரும் திருப்பதி கோயிலுக்கு சென்றுவிட்டதால், பொம்மி மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார். அப்போது, வீட்டின் மொட்டை மாடியில் காய வைக்கப்பட்டிருந்த வீட்டை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் மாப், இவரது வீட்டுக்கும், அருகில் உள்ள வீட்டுக்கும் இடையில் உள்ள அரை அடி சந்தில் விழுந்து கிடந்ததை பார்த்துள்ளார்.

அதை எடுக்க பல வழிகளில் முயற்சித்த அவர், கடைசியில் அரை அடி சந்தில் நுழைந்து எடுக்க சென்றார். அப்போது, மாப்பை எடுத்த மூதாட்டியால் திரும்பி வெளியே வர முடியவில்லை. இருவீடுகளுக்கு இடையே உள்ள அரை அடி சந்தில் சிக்கிக்கொண்டார்.

இவரது அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம்பக்கத்தினர், போலீஸாருக்கு தகவல் கொடுத்தனர். மணலி போலீஸாரும், தீயணைப்பு துறையினரும் சம்பவ இடத்துக்கு வந்து 3 மணி நேரம் போராடி பொம்மியை பத்திரமாக மீட்டனர். இதில் இவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதால், சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

# வயநாடு, கண்ணூர், காசர்கோடு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு கேரள அரசு ஆரஞ்சு அலர்ட்

திருவனந்தபுரம், மே.20-

வடக்கு கேரளாவில் வயநாடு, காசர்கோடு, கண்ணூர் மற்றும் கோழிக்கோடு போன்ற மாவட்டங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், பேரிடர் மீட்பு, வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் நிவாரண முகாம் போன்றவற்றை தயார் நிலையில் வைக்கவும் மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.



இன்று (மே 19) கனமழை மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக காசர் கோடு, கண்ணூர், வயநாடு மற்றும் கோழிக் கோடு மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வானிலை தொடர்பான அவசரநிலைகளை எதிர்கொள்ள மாநில அரசு முன்னேற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளது.

முதல்வர் பினராயி விஜயனின் அலுவலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தில், பல்வேறு துறைகளின் பருவமழை தயார்நிலை குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய கேரள வருவாய்த்துறை அமைச்சர் கே.ராஜன், மே 20 ஆம் தேதிக்குள் பருவமழைக்கு முந்தைய அனைத்து பணிகளையும் அவசரமாக முடித்து, மாவட்ட அளவிலான திட்டமிடல் கூட்டங்களைக் கூட்டுமாறு மாவட்ட நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தினார்.

"பருவமழை தொடர்பான பேரிடர்களை சமாளிக்க ஒவ்வொரு மாவட்டமும் ஒரு செயல் திட்டத்தை வகுக்க வேண்டும். மாவட்ட மற்றும் தாலுகா மட்டங்களில் மீட்பு அமைப்புகளை தாமதமின்றி செயல்படுத்த சரியான பயிற்சி அவசியம்." என்று அமைச்சர் ராஜன் கூறினார்.


இதைத் தவிர, மழைநீர் தேங்குவதைத் தடுக்க, மழைக்காலத்துக்கு முந்தைய வடிகால்கள், மதகுகள் மற்றும் சிறிய கால்வாய்களை மழைக்கா லத்திற்கு முன் சுத்தம் செய்யும் பணி உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அபாயகரமான மரங்கள், தளர்வான விளம்பர போர்டுகள், மின் கம்பங்கள் போன்றவற்றை பாதுகாக்க வேண்டும். மழை தீவிரமடைவதற்கு முன்பு உள்ளாட்சி அமைப்புகள் விரைவான குப்பை அகற்றலை உறுதிசெய்து, பரந்த அளவிலான கொசு கட்டுப்பாட்டு முயற்சிகளைத் தொடங்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## குடும்ப பிரச்சினை வழக்கில் கால்நடை மருத்துவப் பல்கலை பேராசிரியரின் பணி இடைநீக்க உத்தரவை ரத்து செய்தது சரியே : ஐகோர்ட் அதிரடி

சென்னை, மே.20-

குடும்ப பிரச்னை தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பேராசிரியர் திருநாவுக்கரசுவின் பணி இடைநீக்க உத்தரவை ரத்து செய்தது சரியே என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மருமகளின் வரதட்சணை புகாரில், பேராசிரியர் திருநாவுக்கரசு, மகனுக்கு எதிராக செம்பியம் போலீஸ் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு அடிப்படையில், திருநாவுக்கரசை சஸ்பெண்ட் செய்து பல்கலை. உத்தரவு பிறப்பித்தது. இதையடுத்து, ஒய்வுபெற 4 நாட்களுக்கு முன் தம்மை சஸ்பெண்ட் செய்த பல்கலை. உத்தரவை எதிர்த்து திருநாவுக்கரசு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் திருநாவுக்கரசு மீதான பணி இடைநீக்க உத்தரவை தனி நீதிபதி ரத்து செய்தார்.

இதனை எதிர்த்து பல்கலை. நிர்வாகம் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கில் நீதிபதிகள் ஆர் சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவில், "பொது நலன் சார்ந்திருந்தால் மட்டுமே பணியிடை நீக்கம் செய்ய முடியும்.குடும்ப பிரச்சினை தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மனுதாரரை பணியிடை நீக்கம் செய்வதில் என்ன பொது நலன் உள்ளது?. ஆகவே கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பேராசிரியர் திருநாவுக் கரசுவின் பணி இடைநீக்க உத்தரவை தனி நீதிபதி ரத்து செய்தது சரியே. பல்கலைக்கழகத்தின் சார்பில் தாக்கல் செய்ய ப்பட்ட மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்கிறோம். மனுதாரருக்கு வழங்க வேண்டிய ஒய்வு கால பலன்களை 12 வாரங்களில் வழங்க பல்கலை.க்கு ஆணையிடுகிறோம்," "இவ்வாறு தெரிவித்தனர்.



## ஆசிரியர் பயன்பாட்டுக்கு பாடநூல் வழங்க உத்தரவு

சென்னை, மே.20-

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வகுப்பறை பயன்பாட்டுக்கான கைப்பிரதி பாடநூல்கள் வழங்க பள்ளிக்கல்வித் அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து பள்ளிக்கல்வித் துறை செயலர் பி.சந்தரமோகன் வெளியிட்ட அரசாணை: சட்டப்பேரவையில் பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது, ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் வகுப்புகளுக்கான பாடக் கருத்துகளை ஆழ்ந்து படிப்பதற்கும், அதற்குரிய கற்றல் கற்பித்தல் துணை கருவிகளை உருவாக்கும் வகையிலும் வரும் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வகுப்பறை பயன்பாட்டுக்காக கைப்பிரதி பாடநூல்கள் வழங்கப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவித்திருந்தார்.

இதை செயல்படுத்தும் வகையில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வகுப்பறை பயன்பாட்டுக்கான கைப்பிரதி பாடநூல்கள் வழங்க அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் குடிநீர் ஏடிஎம்களை விரைவில் தொடங்கி வைக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மே.20-

சென்னையில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் முதல் கட்டமாக 50 குடிநீர் ஏடிஎம்களை விரைவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். கடற்கரை, பேருந்து நிலையம், பூங்கா, பள்ளி, கல்லூரி மற்றும் மார்க்கெட் பகுதிகளில் குடிநீர் ஏடிஎம் அமைக்கும் பணிகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டு வருகிறது.

150 மில்லி லிட்டர் மற்றும் 1 லிட்டர் என்று இரண்டு வகைகளில் குடிநீர் வழங்கப்படும். வாட்டர் பாட்டில்களில் தண்ணீரை பிடித்துப் பருகும் வகையில் இந்த ஏடிஎம் அமைக்கப்பட்டுள்ளது.



இந்த குடிநீர் ஏடிஎம்கள் மூலம் பலரும் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன் வடிகட்டுதல் +Ro +UV அமைப்புகளுடன் கூடிய மேம்பட்ட நீர் சுத்திகரிப்பு அமைப்புகள் தேசிய தரத்திற்கு ஏற்ப நீரின் தரத்தை வழங்குகின்றன. 24 மணி நேர தடையற்ற ஸ்ஸீ+ஹீஃபூ கிருமி நீக்கம் குளிர்ந்த தூய நீரை உறுதி செய்கிறது. பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான, நீடித்த மற்றும் எளிதான நிறுவலுக்கான கேபினெட் மாதிரி வடிவமைக்கப்படும். மிகக் குறைந்த செலவில் குளிர்ந்த நீர் விநியோகம். தொட்டியின் அளவு இப்போது இருந்தால் மற்றும் மின்னழுத்தம் குறைவாக இருந்தால் நீர் விநியோகம் ஒரு எச்சரிக்கையைக் காண்பிக்கும். இருப்பு இல்லாமல் நீர் விநியோகத்திலேயே கடவுச்சொல் மூலம் ரீசார்ஜ் செய்யலாம். கடைசி 50 ரீசார்ஜ் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளைப் பார்க்கலாம்.

பேட்டரி மூலம் இயக்கப்படும் விநியோக அமைப்பு. பில்லிங் துல்லியத்திற்காக ஸ்மார்ட் கார்டு மற்றும் நாணய அமைப்பை அறிமுகப்படுத்துகிறது. நீர் ரீசார்ஜ் மற்றும் விநியோகத்திற்கான ஷிவிஷி எச்சரிக்கை விடுக்கப்படும்.



■ வேலூர் மாவட்டம், காட்பாடி, வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் விஸ்வநாதனுக்கு நியூயார்க் ஆர் ஐ டி யில் டாக்டர் விருது பெற்றதைத் தொடர்ந்து வேலூர் மாநகராட்சியின் முன்னாள் மாமன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான ரிஷி குமார் நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.

# பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா



பல்லாவரம், மே.20-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அறிவுறுதுதலின்படி கோடை வெய்யிலின் தாகம் தீர்க்க நீர்மோர் பந்தல் திறப்பு விழா 15வது மாமன்ற உறுப்பினர் 15வது வட்ட கழகச் செயலாளர் டி.வி.ராஜா என்கின்ற ராஜேந்திரன் தலைமையில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டி.வி.ஆர் கௌதம் பாபு ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டல குழு தலைவர், பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணா துரை கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து தாகம் தீர்க்க தர்பூசணி இளநீர் குளிர்பானங்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னாட், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்திய பிரபு, மாணவர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.இன்சமாம், பகுதி இளைஞரணிகள் அமைப் பாளர் சரத் வெங்கடேசன் மற்றும் முரசொலி ராஜன், 15வது வார்டு இளைஞர் அணி செயலாளர் எஸ்.சரவணபாலன் திமுக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# காரைக்குடி அருகே ஆவுடைப்பொய்கையில் அன்னை சவரியாயி 65ம் ஆண்டு திருத்தல பெருவிழா மற்றும் புனித ஆரோக்கிய அன்னை 45ம் ஆண்டு பெருவிழா





காரைக்குடி, மே.20-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே ஆவடைப் பொய்கையில் அன்னை சவரியாயி 65ம் ஆண்டு திருத்தல பெருவிழா மற்றும் புனித ஆரோக்கிய அன்னை 45ம் ஆண்டு பெருவிழா நடைபெற்றது. முன்னதாக காலை 9 மணி அளவில் பதுவை புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து சவரியாயி திருத்தலத்திற்கு புனித சவேரியார் சப்பரப்பவனி நடைபெற்றது. 10.30 மணி அளவில் பெருவிழா கூட்டுத்திருப்பலி அருள்திரு தோ. யூஜின், அருள்திரு ஆ.தாமஸ் ஜூலியன் திருச்சி மதுரை மாவட்ட பங்குத்தந்தை மற்றும் அருட் தந்தையர்கள் தலைமையில் நடைபெற்றது. சுமார் 11.30 அன்னை சவரியாயி கல்லறை அர்ச்சித்தல் நிகழ்வு நடைபெற்றது. 12 மணி அளவில் அன்னையின் அன்பு உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டு, அன்னதானம் நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாட்டினை அருள்மிகு பங்குத்தந்தை சாமு இதயன் மற்றும் ஆவுடைப் பொய்கை கிராம இறை மக்கள் செய்திருந்தனர்.



# சிவகங்கை மாவட்ட அளவிலான சிலம்பாட்டப் போட்டியில் திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பம் பள்ளி சாதனை

சிவகங்கை, மே.20-

சிவகங்கை மாவட்ட சிலம்பாட்டக் கழகத்தால் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல் நிலைப்பள்ளியில் நேற்று நடந்த 13 வது மாவட்ட அளவிலான சிலம்பாட்டப் போட்டியில் தொடுமுறைப் (கம்புச் சண்டை) போட்டியில் மட்டும் திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பப்பள்ளி 8 தங்கம், 5 வெள்ளி,5 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்தது. போட்டியில் வெற்றி பெற்று பதக்கங்களைக் குவித்த மாணவ மாணவியரை திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளியின் ஆசான் நமசிவாயம், பயிற்சியாளர்கள் லதா நமசிவாயம், சுந்தரமூர்த்தி நமசிவாயம், சுந்தரமணி நமசிவாயம் மற்றும் பெற்றோர் பாராட்டி வாழ்த்தினர்.

# உலக அளவில் புகழ் பெற்ற வேலூர் வி.ஐ.டி.யில், ஸ்டார்ஸ் திட்ட 8ஆம் ஆண்டு விழா மற்றும் ஸ்டார்ஸ் மாணவர்கள் சந்திப்பு கூட்டம்

## ஸ்டார்ஸ் திட்ட முன்னாள் மாணவர்கள் ரூ.7 லட்சம்/ ஏழை மாணவர்கள் உயர்க்கல்வி படிக்க, ஸ்டார்ஸ் குழுமத்திற்கு நிதி உதவி வழங்கினர்




காட்பாடி, மே.20-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ் பெற்ற வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக கல்வி, இருப்பிடம், உணவு அளிக்கும் 8ஆம் ஆண்டு விழா ஸ்டார்ஸ் திட்ட விழா மற்றும் மாணவர்கள் சந்திப்பு கூட்டம் விஐடி வேந்தர் விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் கஷ்டப்பட்டால் தான் வாழ்க்கையில் முன்னுக்கு வர முடியும் என நடிகர் கார்த்தி பேசினார்.

இவ்விழாவில் வி.ஐ.டி.வேந்தர் ஜி.விசுவநாதன் தலைமை தாங்கி பேசியதாவது; 2008ஆம் ஆண்டு ஸ்டார்ஸ் திட்டம் தொடங்கப்பட்டது. இதற்கு அடிப்படை கல்வி தான், அதுவும் உயர்கல்வி, உயர்கல்வியில் இந்தியா பின்தங்கி உள்ளது. இந்த நாட்டில் ஆண்டுக்கு 28 சதவீதம் பேர் மட்டுமே உயர்கல்வி பெறுகின்றனர். ஆனால், தமிழகம் 50 சதவீதமாக இருந்தாலும், வடமாவட்டங்கள் கல்வியில் பின்தங்கியுள்ளன. இந்த ஆண்டு வேலூர் மாவட்டம் பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 பொதுத்தேர்வு தேர்ச்சியில் கடைசி மாவட்டமாக உள்ளது.

இந்நிலை மாற அரசு, அதிகாரிகள், பொதுமக்கள் என அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

வி.ஐ.டி செயல்படுத்தி வரும் ஸ்டார்ஸ் திட்டத்தின்கீழ் இதுவரை 1014 மாணவர்கள் பயன்பெற்று உள்ளனர். இதற்காக வி.ஐ.டி ரூ.90 கோடி செலவழித்துள்ளது. நாடு பொருளாதாரத்தில் உயர வேண்டும் என்றால் கல்வியில் உயர வேண்டும். அதற்கு மத்திய, மாநில அரசுகள் கல்விக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தி வருவாயில் 6 சதவீதம் கல்விக்கு ஒதுக்க வேண்டும். ஆனால், இப்போது வரை அதிகபட்சம் 3 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்படுகிறது. இந்தாண்டு மத்திய பட்ஜெட்டில் கல்விக்கு 2 .5 சதவீதம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களாட்சி வெற்றிப் பெற மக்களுக்கு போதிய விழிப்புணர்வு அவசியமாகிறது. அதுவும் கல்வியால் மட்டுமே சாத்தியமாகும். நாட்டின் பொருளாதாரம், தனிநபர் வருமானம், மக்களாட்சித் தத்துவம் மேன்மையடைய கல்வி அவசியம். அதற்கு அரசுகள் கல்விக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். கல்வியால்தான் வீடும் வளரும், நாடும் வளர முடியும், என பேசினார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகர் கார்த்தி கலந்து கொண்டு பேசியதாவது; முன்பின் தெரியாதவர்களுக்கும் செய்யும் உதவியைவிட அழகு வேறெதுவும் கிடையாது. அத்தகைய அன்பை, அழகை வி.ஐ.டி பல்கலைக்கழகம் ஸ்டார்ஸ் திட்டம் மூலம் வழங்கி வருகிறது. கடைக் கோடியில் வாழ வழியின்றி தவிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் தான் அரசுப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அத்தகைய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஒரே நம்பிக்கை கல்வி மட்டும்தான். கல்வி தரும் நம்பிக்கையைவிட வேறொன்றும் இல்லை. அத்தகைய கல்வி என்பது எவ்வளவு கொடுத்தாலும் குறையக்கூடியதல்ல. மென்மேலும் அதிகரிக்கக்கூடியது. அவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளியில் பயின்ற சிறந்த மாணவ, மாணவிகளை தேர்வு செய்து இலவச கல்வி, உணவு, உறைவிடம் அளித்து பல நாடுகளிலும் வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்துள்ளனர்.

வாழ்க்கைக்கு கல்வி மிக மிக அவசியமாகும். பணி செய்வதற்கு மட்டுமின்றி வாழ்க்கையை திறம்பட வாழவும், மற்றவர்களுடன் பழகவும்கூட கல்வி அவசியமாகிறது. அதன்படி, ஸ்டார்ஸ் திட்டம் மூலம் பயன்பெற்ற மாணவர்கள் தன்னை போன்றே ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களை முன்னேற்ற உதவ நினைப்பதுதான் இந்த திட்டத்தின் வெற்றியாகும். அந்த வகையில், ஸ்டார்ஸ் திட்டம் மூலம் வி.ஐ.டி வேந்தர் கோ. விசுவநாதன் தன்னைப் போன்றே கற்றறிந்த அறிஞர்கள் பலரையும் உருவாக்கி வருகிறார் என அவர் பேசினார். பின்னர் மாணவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் கூறுகையில், கல்வியை போன்றே விவசாயம் தேவை. விவசாயிகளை போர் வீரர்களை போல மதிக்க வேண்டும். விவசாயம் செய்பவர்கள் வயதானவர்களாக இருக்கிறார்கள். இளைய தலைமுறை விவசாயம் செய்ய வர வேண்டும் என்றார்.

கவுரவ விருந்தினராக திரைப்பட இயக்குநர் த.செ.ஞானவேல் கலந்து கொண்டு பேசினார்.

வி.ஐ.டி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், செயல் இயக்குனர் சந்தியா பென்டாரெட்டி, உதவி துணைத்தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றி விழாவை சிறப்பித்தனர். இந்த விழாவில் ரமணி பாலசுந்தரம், இணை துணை வேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.ஸ்டார்ஸ் திட்ட முன்னாள் மாணவர்கள் ரூ.7 லட்சம் ஏழை மாணவர்கள் உயர்க்கல்வி படிக்க, ஸ்டார்ஸ் குழுமத்திற்கு நிதி உதவி வழங்கினர். இதனைத் தொடர்ந்து முன்னாள் வெற்றி சாதனை மாணவி பேசியதாவது: ஸ்டார்ச் திட்ட வெற்றி மாணவி திரைத்துறை இயக்குனர்களுக்கு புகை பிடித்தல் மது அருந்துதல் ஆபாச கவர்ச்சி உடை கலாச்சார சீரழிவு காட்சிகள், மத நல்லிணக்க இறையாண்மைக்கு எதிராக ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் தயாரித்து வெளியிடும் காட்சிகள் போன்றவற்றைகள் இல்லாமல் படங்களை தயாரிக்க கோரிக்கை வைத்து சிறப்புரையாற்றினர்.

இவ்விழா இறுதியில் கோவர்தன் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மார்ச் 2025 ல் நடைபெற்ற பொதுத்தேர்வில் தேர்வு எழுதிய 318 பள்ளிகளில் 117 பள்ளிகள் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 24 அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலை பள்ளிகள் 100% தேர்ச்சி பெற்று மதுரை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. இதனை தொடர்ந்து 100 % தேர்ச்சிபெற்ற எஸ்.கோட்டைப்பட்டி பராசக்தி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் குணசேகரனுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ. சங்கீதா இ.ஆ.ப பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினர். உடன் ரேணுகா முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் இந்திரா மாவட்ட கல்வி அலுவலர் உள்ளனர்.



# தேர்தலுக்கான வாக்குச்சாவடி முதல் நிலை முகவர்கள் பயிற்சி முகாம் டெல்லியில் மே 22, 23ம் தேதிகளில் நடைபெற உள்ளது

புதுடெல்லி, மே.20-

தேர்தலுக்கான வாக்குச்சாவடி முதல் நிலை முகவர்கள் பயிற்சி முகாம் டெல்லியில் மே 22, 23ம் தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் முதல் நிலை முகவர்கள் கலந்து கொள்கின்றனர். கூட்டத்தில் கலந்து கொள்ள செல்பவர்களுக்கு செய்யப்படவுள்ள முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்வதற்காக சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் இன்று ஆலோசனை நடைபெறவுள்ளது.



# சிவகங்கை வீர விதை சிலம்பம் அணி கலை வளர்மணி டாக்டர் பெருமாள் தலைமையில் கேரளாவில் பதக்கங்களை பெற்று சாதனை

மானாமதுரை, மே.20-

மானாமதுரை கேரளா மாநிலம் கொல்லத்தில் தேசிய அளவிலான சிலம்பாட்ட போட்டி நடைபெற்றது. இதில் சிவகங்கை மாவட்டம் சார்பாக வீரவிதை சிலம்ப அணி கலை வளர்மணி டாக்டர் பெருமாள் தலைமையில் பங்குபெற்று 15 தங்க பதக்கங்களையும், மூன்று வெள்ளிப்பதக் கங்களையும் வென்றனர். 10 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தேசிகா ஸ்ரீ தங்கப்பதக்கமும், 12 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கர்னித், யோவன் அஸ்வா, அரிஸ்வரன் தங்கப்பதக்கமும், ஹரிசுதன் வெள்ளிப் பதக்கமும், 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நிரஞ்சன், ராஜ் குமார், மதன்குமார், கிருத்திஷ், ரிஷ்வந்த், அகிலேஷ்வரன், விஷ்வந்த், தேவனேஷ்வரன் தங்கப் பதக்கமும், யஸ்வந்த் வெள்ளிப் பதக்கமும், பெண்கள் பிரிவில் வர்ஷினி, ஹரிதர்ஷினி தங்கப்பதக்கமும், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அருண்பாண்டி தங்கப்ப தக்கமும், பெண்கள் பிரிவில் தேஜஸ்வினி வெள்ளிப் பதக்கமும் வென்று சாதனை படைத்து அணிக்கு பெருமை சேர்த்தார்கள்.வெற்றி பெற்ற மாணவர்களை பெற்றோர்கள் மாலை அணிவித்து, பட்டாசு வெடித்து வரவேற்றனர்



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் 10 ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளை மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் பாராட்டி பரிசுகளை வழங்கினார்கள் அருகில் துணை மேயர் நாகராஜன், கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், கல்வி அலுவலர் ஜெய்சங்கர் , மாமன்ற உறுப்பினர் நூர்ஜஹான் ஆகியோர் உடன் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161